அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 11/2014

எனது இல : ST/8/ALLOW/03/144/3
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.04.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**"தயட கிருள" தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களிற்கான படிகளின் கொடுப்பனவு**

2014 "தயட கிருள" தேசிய அபிவிருத்தி கண்காட்சியின் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்காக உரித்துடையவராக்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு இணைந்த படிகளுக்கு சமமான மேலதிக விசேட கொடுப்பனவொன்றினை வழங்குவதற்கு அங்கீகாரமானது இத்தால் வழங்கப்பட்டுள்ளது.

02. அரசாங்கத்தின் செலவினங்களில் இருப்பிடம், உணவு மற்றும் பானங்களின் ஏற்பாடுகள் காரணமாக இணைந்த படியினைப் பெறாத உத்தியோகத்தர்கள் அத்துடன் மேற்படி வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படாததன் காரணமாக இணைந்த படி வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் இந்த விசேட படியானது வழங்கப்பட முடியும்.

03. மேலதிக நேரக்கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்த சுற்றறிக்கையின் படி இந்த விசேட படிகளுக்கு உரித்துடையவராக்கப்படமாட்டார்கள். இருந்த பொழுதும், ஏற்கனவேயுள்ள ஏற்பாடுகளின் படி மேலதிக நேரப்படி வழங்கலாம்.

04. 2014.02.21 ஆம் திகதியில் இருந்து 2014.03.01 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் உத்தியோகத்தர்கள் அலுவலக நேரத்தினை விட மேலதிகமாகக் கண்காட்சி மீதான கடமைகளை நிறைவேற்றிய நாட்களின் எண்ணிக்கைக்காக இந்த விசேட படியானது வழங்கப்பட முடியும்.

05. இந்த சுற்றறிக்கையானது பொதுத்திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு